[1979 அக்டோபர் 27

சாண்டையூர் கிராமத்தில் ஏரி அமைப்புத் திட்டம்.

வினா எண். 15—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மதுரை மாவட்டம், திருமங்கலம் தாலுக்கா சாண்டையூர் கிராமத்திற்கு காட்டுத் தண்ணீரை உபயோகப் படுத்த ஒரு ஏரி ஏற்படுத்த அரசு திட்டம் தீட்டியுள்ளதா ?

(ஆ) ஆம் என்றால், திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

(இ) மேற்படி திட்டத்தின்கீழ் எவ்வளவு விஸ்தீரணம் சாகுபடி செய்ய பயன்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) & (ஆ) ஆம். திட்ட வேலைகள் 1978ஆம் வருடம் ஜூன் மாதம் முடிவு பெற்றன.

(இ) இத் திட்டத்தினால், மொத்தம் 393.49 ஏக்கர் நிலங்கள் பயன் பெறுகின்றன.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்ததற்காக அமைச்சருக்கு நன்றி. திருமணி முத்தாறு அணைத் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது ? அய்யனார் ஓடை அருவித் திட்டம் எப்போது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இரா. முத்தையா : இதிலே திருமங்கலம் வட்டம், சந்தையூர் கிராமம் என்று இருக்க வேண்டும். ஆங்கிலத்திலிருந்து அப்படியே மொழி பெயர்த்திருப்பதால் சாண்டையூர் என்று போடப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். இது திரு. ஆண்டி அம்பலம் செய்த தவறா, துறை செய்த தவறா என்று தெரியவில்லை. அந்த ஏரி ஏனைய ஏரிகளுக்குத் தண்ணீர் கொடுக்கிறது. ஆனால் அந்த ஏரிக்கு எந்தவிதப் பாசனப் பகுதியும் இல்லை. அந்த ஏரிக்குப் பாசனப் பகுதி ஏற்படுத்தும் உத்தேசம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : சந்தையூர் என்பது சாண்டையூர் என்று இங்கே தவறாக அச்சிட்டிருக்கிறார்கள். அந்த ஏரியின் மூலமாகப் பாசன வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இக் கேள்வியில் சந்தையூர் என்பதை துறை சாண்டையூர் என்று போட்டு விட்டதாக திரு. முத்தையா அவர்கள் சொன்னார்கள். ஆனால் திரு. ஆண்டி அம்பலம் அவர்களே சாண்டையூர் என்றுதான் எழுதிக் கொடுத் திருக்கிறார்கள். ஆகவே, இலாகாமேல் குற்றம் இல்லை.

Improvements to Valligaram, Pallipet and Poonimangadu Anicuts.

*Q. No. 16 Thiru A. EKAMBARA REDDY: will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state:

(a) Whether there is any proposal with the Government to undertake repairs and improvements to the Head works and Supply channels of Valligaram, Pallipet and Poonimangadu Public Works Department tanks in the transferred areas of Pallipet and Tiruthani taluks of Chingalpattu district as per Shri H. V. Pataskar's Award?

(b) if so, the estimated cost for each work; and

(c) whether the works will be taken up for execution during 1979-80.

THE HON. THIRU P. KULANDAIVELU:

(a) Yes.

(b) (i) Pallipet Anicut and Supply channel— Rs. 2·60 lakhs.

(ii) Poonimangadu anicut and Supply. Channel — Rs. 2.91 lakhs.

(iii) Valligaram Anicut — under investigation.

(c) The concurrence of Government of Andhra Pradesh is awaited to take up the execution of the two works for which estimates have been prepared.

THIRU A. EKAMBARA REDDY: Mr. Speaker Sir, While thanking the Hon. Minister, I would like to know whether there is any proposal to get the works executed by our Government? why can't our Government get the concurrence of the Andhra Government to get the works executed by our Government.

THE HON. THIRU P. KULANDAIVELU: Mr. Speaker Sir, we have tried our level best to get the concurrence of the Andhra Government. We have written in 1977 and again we are writing a letter by this month. The works will be executed with the concurrence of the Andhra Government.